8. ஆய்வு குறித்து பங்கேற்பாளர்கள் எழுப்பும் வினாக்களும் விவாதங்களும் கட்டுரையின் மீதான முதல் மதிப்பீடாக அமையும். அவற்றை அடிப்படையாகக் கொண்டு திருத்தியமைக்கப்பட்ட கட்டுரைகள் மின்னிதழில் வெளியிடுவதற்குப் பரிந்தனுப்பப்படும். அவ்வாறு பெறப்பட்ட கட்டுரைகள் சர்வதேசத் தமிழ் ஆய்விதழின் (UGC – Care listed Journal) வல்லுநர் குழுவின் மதிப்பீட்டிற்கு உட்பட்டு வெளியிடுவதற்கு பரிந்துரைக்கப்படும். தேர்ந்தெடுக்கப்பட்ட கட்டுரைகள் மட்டுமே சிறப்பிதழாக வெளியிடப்படும். தேர்வு செய்யப்பட்ட கட்டுரையாளர்கள் வெளியீட்டுக் கட்டணமாக ரூ.1500 செலுத்த வேண்டும். (ஆய்விதழில் வெளியிடுவதற்கான கட்டணம் பின்னர் பெறப்படும்)

கட்டண விபரங்களையும் கட்டுரைகளையும் இணைத்து tamilsfrc2021@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு 10.11.2021 ஆம் தேதிக்குள் அனுப்பவும் கட்டுரையில் ஆசிரியர் பெயர், பதவி, முழுமுகவரி, தொடர்பு எண், மின்னஞ்சல் முகவரி உள்ளிட்ட விபரங்களைக் கட்டாயம் பதிவுசெய்யவும்.

கருத்தரங்கில் பங்கேற்கும் அனைவரும் கட்டாயம் பதிவுக் கட்டணம் செலுத்தித் தங்களின் பங்கேற்பை உறுதிப்படுத்திக் கொள்ளவும். ஆய்வு சிறக்க வாழ்த்துகள்.

## கருத்தரங்கில் பங்கேற்க பதிவுக்கட்டணம்

| | |
|---|---|
| ஆய்வாளர்கள் | : ரூ.100/– |
| பேராசிரியர்கள் மற்றும் ஆர்வலர்கள் | : ரூ 200/– |

## பதிவுக்கட்டணம் செலுத்த வேண்டிய வங்கி விபரம்

Secretary
SFR College for Women,
Sivakasi
Account Number : 008501000025764
IFSC – IOBA0000085

### புரவலர்கள்

**திருமதி திலகவதி இரவீந்திரன்,**
கல்லூரித் தலைவர்
**திருமதி அருணா அசோக்,**
கல்லூரிச் செயலர்

### தலைவர்

**முனைவர் த. பழனீஸ்வரி,**
கல்லூரி முதல்வர்

### கருத்தரங்க ஆலோசகர்

**முனைவர் பா. பொன்னி,**
தமிழ்த்துறைத் தலைவர்

### ஒருங்கிணைப்பாளர்கள்

**முனைவர் மா. பத்ம பிரியா,**
தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர்
**முனைவர் ச. தனலெட்சுமி,**
தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர்
**திருமதி பெ. ஆனந்தி,**
தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர்

### ஒருங்கிணைப்புக்குழு

முனைவர் ர.விஜயப்ரியா,
தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர்
திருமதி கு.வளர்மதி,
தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர்
முனைவர் வி.அன்னபாக்கியம்,
தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர்
முனைவர் பா.மீனாட்சி,
தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர்
முனைவர் இரா.செண்பகவள்ளி,
தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர்
முனைவர் நா.கவிதா,
தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர்

முனைவர் வீ.முத்துலட்சுமி,
தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர்
திருமதி மா.முத்துச்செல்வி,
தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர்
திருமதி மு.பூங்கோதை,
தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர்
முனைவர் சி.தேவி,
தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர்
முனைவர் கு.செல்வஈஸ்வரி,
தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர்
திருமதி ச.மீனாட்சி,
தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர்




IOR PRESS

# தி ஸ்டாண்டர்டு ஃபயர்ஒர்க்ஸ் இராஜரத்தினம் மகளிர் கல்லூரி (தன்னாட்சி),

(ஆற்றல்சால் கல்லூரி, தேசியத்தர நிர்ணயக் குழுவின் மறுமதிப்பீட்டில் 'A'தரம் பெற்றது. யுஜிசி பரமார்ஷ் திட்டத்தின் கீழ் வழிகாட்டும் நிறுவனமாகத் தகுதி பெற்றது)

**சிவகாசி**

## தமிழ் உயராய்வு மையம்

மற்றும்

## சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

இணைந்து நடத்தும்

## பன்னாட்டுக் கருத்தரங்கம்

# காலந்தோறும் பெண்

நாள் : 20.11.2021

***********

கட்டுரையைப் பின்வரும் மின்னஞ்சல் மூலமாக சமர்ப்பிக்க வேண்டும்.
E mail : tamilsfrc2021@gmail.com
தொடர்புக்கு
+91 94868 62263, +91 90953 09515, +91 96596 64915

**தேர்ந்தெடுக்கப்பட்ட கட்டுரைகள் சர்வதேசத் தமிழ் ஆய்விதழில் (*UGC-Care Listed Journal*) வெளியிடப்படும்**

பேரன்புடையீர்,

வணக்கம். பொன்விழா கண்ட சிவகாசி திஸ்டாண்டர்டு ஃபயர்ஒர்க்ஸ் இராஜரத்தினம் மகளிர் கல்லூரி 1968 ஆம் ஆண்டு ஆன்றோரின் அறப்பணியால் இனிதே தொடங்கப்பட்டது. கல்வியில் சிறந்து விளங்குவதற்கு ஆதாரமாக தேசியத்தர நிர்ணயக்குழுவின் மறுமதிப்பீட்டில் 'A'தரம் பெற்று, ஆற்றல்சால் கல்லூரியாக உயர்ந்தது. யுஜிசி எனப்படும் பல்கலைக்கழக மானியக்குழுவின் பரமார்ஷ் திட்டத்தின் கீழ் வழிகாட்டும் நிறுவனமாகவும் தகுதி பெற்ற எம் கல்லூரி மகளிரின் கல்வி மற்றும் வேலைவாய்ப்புக்கு உறுதுணையாக 18 துறைகளுடன் கந்தகப்பூவாக ஒளிர்கின்றது. மாணவியரின் பல்துறை ஆய்வுக்கு வழிகாட்டும் உயராய்வு மையங்களுடன் ஆய்வுத்தடகளத்தில் உலகத் தரத்தைப் பெற்றுப் பல பன்னாட்டுக் கருத்தரங்குகளை நிகழ்த்தியும் வருகின்றது.

இத்தகு சீர்மிகு ஆய்வுத்தடத்தின் தொடர்ச்சியாக எங்கள் கல்லூரியின் தமிழ் உயராய்வு மையமும் சர்வதேசத் தமிழ் ஆய்விதழும் இணைந்து "காலந்தோறும் பெண்" எனும் மையப்பொருண்மையில் ஒருநாள் பன்னாட்டுக் கருத்தரங்கம் நடத்தத் திட்டமிட்டுள்ளோம். பெண்ணியத் திறனாய்வை ஆய்வுக்களமாகக் கொண்டு ஆய்வுக்கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன.

ஆய்வாளர்களை கட்டுரைகள் வழங்கிக் கருத்தரங்கில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கிறோம்.

## ஆய்வுக் களங்கள்

இனக்குழுச் சமுதாயத்தின் தொடக்க காலந்தொட்டுச் செழுமையின் குறியீடாக வலிமையானவளாக பெண் கருதப்பட்டதால் பெண் வணங்குதற்கும் வழிபாட்டிற்கும் உரியவளானாள். பண்டை தமிழ்இலக்கியங்களிலும் உலக இலக்கியங்களிலும் இதற்கானச் சான்றாவணங்களைக் காணலாம். இந்தியப் பெண்ணியம் 'தாய்மை', 'குடும்பம்' என்ற கருத்துருவங்களில் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. மேலைநாடுகளில் இருந்து தமிழுக்கு அறிமுகமாகியுள்ள 'பெண்ணியத் திறனாய்வு' ஆண்–பெண் சமத்துவத்தில் கவனம் செலுத்தும் ஆய்வுமுறையாகும். பெண்களை புறந்தள்ளும் சமூகம், அரசியல், பொருளாதாரம், நிறுவன கட்டமைப்புக்கள் மற்றும் அவற்றின் செயல்பாடுகளைக் கேள்விக்குட்படுத்தி அனைத்து வகைப் பெண்களுக்கும் சமஉரிமை கிடைக்க போராடுதல் இதன் செயல்முறையாகும். ஆதலால், பெண்ணிய ஆர்வலர்கள் தம் படைப்புகளில் சமத்துவமின்மையின் மூலங்கள், சமத்துவத்தை அடைவதற்கான வழிமுறைகள் என்று பெண்ணிய விழிப்புணர்வு கருத்தாக்கத்தை விதைத்து வருகின்றனர். அவ்வகையில் சங்க காலம் முதல் தற்காலம் வரை பல்வேறு துறைகளிலும் பதிவு செய்யப்பட்டுள்ள பெண்களின் சாதனைகளை, சிந்தனைகளை ஆராயும் நோக்கோடு இக்கருத்தரங்கம் நடைபெறவுள்ளது. சமூகவியல், வரலாற்றியல், உளவியல், மார்க்சியம், அமைப்பியல், பின்னை அமைப்பியல் முதலிய கோட்பாடுகளோடு பெண்ணியத் திறனாய்வு நெருக்கம் கொண்டிருக்கிறது என்பதால் இதன் கருத்துநிலைகள், மிதவாதம், தீவிரவாதம் முதலிய பல பண்புகளைப் பெற்றிருக்கின்றன.ஆதலால், ஆய்வாளர்கள், தமிழ்மொழி மட்டுமல்லாது உலகளாவிய பிற மொழி இலக்கியங்களிலும் பதிவுசெய்யப்பட்டுள்ள பெண்ணியப் படைப்புகளை எடுத்து ஆராயலாம். பெண்களின் முன்னேற்றம் குறித்த வழிமுறைகளை, பெண் எழுச்சிக் கருத்துக்களை மையப்படுத்திய ஆய்வுக் கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன.

| | |
|---|---|
| இலக்கியம் | மேலாண்மை |
| இலக்கணம் | மருத்துவம் |
| வரலாறு | சூழலியல் |
| கல்வெட்டுகள் | அறிவியல் |
| தத்துவம் | சுயதொழில் முனைவு |
| அரசியல் | தன்னார்வலர்கள் |
| வணிகம் | கலைகள் |
| வேளாண்மை | ஆய்வுலகு |
| இறையாண்மை | தொழில்நுட்பம் |

இவை போன்ற சான்றாதாரங்கள் மட்டுமின்றி பிறதுறைகளில் இடம்பெறும் பெண்கள் குறித்த சிந்தனைகளை வெளிப்படுத்தியும் ஆய்வுக் கட்டுரைகள் வழங்கலாம்.

## கட்டுரையாளர்கள் கவனத்திற்கு,

1. ஆய்வுக்கட்டுரையைச் சொற்கோப்பில் (Word Document) A4 தாளில் 1.5 இடைவெளியுடன் லதா யுனிகோடு (Latha Unicode font) எழுத்துருவில் கணினிவழி தட்டச்சு செய்து tamilsfrc2021@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு 10.11.2021 ஆம் தேதிக்குள் அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறோம்.
2. ஆய்வு தன்னளவில் முழுமையானதாக அமைய வேண்டும். ஆய்வுக்கட்டுரைகள் சொந்த முயற்சியில் உருவான புதிய மற்றும் அசல் கண்டடைவாக இருத்தல் வேண்டும். இதற்கு முன் வேறெந்த ஊடகங்களிலும் வெளிவராததாக இருக்க வேண்டும்.
3. கட்டுரையாளர் பெயர், பதவி, துறையின்பெயர், கல்லூரி / பல்கலைக்கழகம். நகரம், அஞ்சல் குறியீடு, நாடு, மின்னஞ்சல் முகவரி மற்றும் தொடர்பு எண் ஆகியன தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் கட்டாயம் இடம்பெற வேண்டும்.
4. கட்டுரைத் தலைப்பு, ஆய்வுச்சுருக்கம், குறிச்சொற்கள், முன்னுரை, ஆய்வுரை (துணைத் தலைப்புகளுடனும், விவாதங்களுடனும்) ஆய்வுப் பயன்கள், முடிவுரை ஆகியன உள்ளடக்கியதாக கட்டுரையின் வடிவம் அமைந்திருக்க வேண்டும்.
5. மேற்கோள்கள் எங்கெங்கு எடுத்தாளப்படுகின்றனவோ அந்தந்த இடங்களிலேயே ஆசிரியர் பெயர், ஆண்டு எ.கா. (சுவாமிநாதஐயர், உ.வே. 1984) மட்டும் குறிப்பிட வேண்டும்.
6. மேற்கோள்கள் விபரங்கள் (ஆசிரியர்பெயர், (வெளிவந்த ஆண்டு), புத்தகத்தின்பெயர், (வெளிவந்த பதிப்புவரிசை) வெளியீட்டாளர் பெயர் மற்றும் முழுமுகவரி.) கட்டுரையின் இறுதியில் இடம்பெற வேண்டும் கட்டுரை தமிழில் மட்டுமே இருத்தல் வேண்டும். (கட்டுரைத் தலைப்பு, ஆய்வுச்சுருக்கம் தமிழில் தரலாம். ஆங்கில மொழிபெயர்ப்பு கட்டாயம் அல்ல)
7. கருத்தரங்க நாளன்று ஆய்வாளர்கள் தங்களின் ஆய்வுக் கட்டுரைகளை கட்டாயம் வாசித்தளிக்க வேண்டும். கருத்தரங்கில் கலந்து கொண்டு கட்டுரை வாசிக்கும் அனைத்து ஆய்வாளர்களுக்கும் சான்றிதழ் வழங்கப்படும்.

## கட்டுரை மாதிரி வடிவம்

https://drive.google.com/file/d/1OZKyQ2wtfGGVr7RPRy1nolLtv1OTnG94/view